NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை



"ஹரே ராம..." மஹாமந்திர
நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை
இடம்: காமராஜர் அரங்கம், சென்னை, தேதி : 01.01.2007

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"


| வேணு : 12 | பிப்ரவரி – 2007 | கானம் : 7 |
|---|---|---|

www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி :

**கிருத்திகா மண்டல**

**வேத பாராயண பூர்த்தி**

இடம் : பிரேமிகபவனம்

சென்னை,

தேதி : 12.01.2007







**ஸ்ரீமத் பாகவத உதயாஸ்தமன**

**ஸப்தாஹ மஹோத்ஸவம்**

இடம் : குருவாயூர்.

தேதி : 14.01.2007 முதல்

21.01.2007 வரை



ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாளின்
ஐந்தாவது பிரதிஷ்டாதின வைபவம்
இடம்: மஹாரண்யம்.
தேதி : 23.01.2007



சாமவேத வித்யாலயா
புதிய கட்டிட திறப்பு விழா
இடம்: அதிதி ஆஸ்ரமம்.
திருவண்ணாமலை
தேதி : 25.01.2007

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில். ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில்

Rajapalayam Swami Vivekananda Yoga & Skating Kazhagam,
Pathanjali Yoga Centre

அவர்களின் யோகா வலிமை செய்முறை நிகழ்ச்சிகள்





ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியுடன் சிறப்புவிருந்தினர்
திரு.P.காளிமுத்து I.P.S, Member Police Commission
இடம்: மதுரபுரி. தேதி : 28.01.2007

# மதுரமுரளி

**Rs.10/-**


**Registered as Newspaper in India R. No. 62828 / 95**


Date of Publication: 5th and 6th of Everymonth

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

| வேணு : 12 | பிப்ரவரி – 2007 | கானம் : 7 |
|---|---|---|






"ஹரே ராம..." மஹாமந்திர

நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை, சென்னை, தேதி : 01.01.2007


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 12 பிப்ரவரி 2007 கானம் : 7

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 133 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 6 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | ... | 8 |
| 5. | யூத மதமும், யூதர்களும் - ஓர் சிறிய அறிமுகம் | ... | 10 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களிலிருந்து ரஸானுபவங்கள் - 19 | ... | 13 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 106 | ... | 16 |
| 8. | மாலே மணிவண்ணா - 49 | ... | 19 |
| 9. | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | ... | 21 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 131 | ... | 24 |
| 11. | செய்திகள் | ... | 27 |
| 12. | நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள் | ... | 30 |

**Friend in a Hurry!**
**There is nothing to worry,**
**if you chant the Names of Hari!!**

*- Sri Sri Swamiji*

ஸ்ரீ ஹரி :

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

(பிருந்தாவனமும் நந்தகுமாரனும் மெட்டு)

*உள்ளே பார்! உள்ளே பார்!*
*உள்ளே பார்! ஞானத் தங்கமே!*
*உள்ளே பார்க்க முடியாவிட்டால்*
*வெளியே கண்ணனை பார்! பார்! பார்!* **(உள்ளே)**

*பேசாதிரு! பேசாதிரு!*
*பேசாதிரு! ஞானத்தங்கமே!*
*பேசாதிருக்க முடியாவிட்டால்*
*கண்ணனைப் பற்றியே பேசியிரு!* **(உள்ளே)**

*உண்ணாதிரு! உண்ணாதிரு!*
*உண்ணாதிரு! ஞானத்தங்கமே!*
*உண்ணாதிருக்க முடியாவிட்டால் - கண்ணன்*
*அமுது செய்ததை உண்டிரு* **(உள்ளே)**

*கேளாதிரு! கேளாதிரு!*
*கேளாதிரு! ஞானத்தங்கமே!*
*கேளாதிருக்க முடியாவிட்டால்*
*கண்ணனின் லீலைகளைக் கேட்டேயிரு!* **(உள்ளே)**

*அலையாதிரு! அலையாதிரு!*
*அலையாதிரு! ஞானத்தங்கமே!*
*அலைவதற்கு ஆசை இருக்குமானால்*
*கண்ணன் ஆலயம் செல்வாயே!* **(உள்ளே)**

*வழியிதுவே! வழியிதுவே!*
*வழியிதுவே! ஞானத்தங்கமே!*
*விழிப்புடன் நீயும் வழுவாமல் இருந்து*
*முக்தியைத் தழுவிக்கொள்வாயே!* **(உள்ளே)**

''பாரத நாடு எப்பொழுது சுதந்திரம் அடைந்தது என்ற கேள்வி கேட்டு அதற்கு சரியான பதில் சொல்லிக் கொடுப்பதை விட, பாரத தேசம் எப்படி சுதந்திரம் அடைந்தது என்பதையே எல்லோருக்கும் பாடமாக சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். சரித்திரம் என்பது ஒரு முக்கியமான துறையாக இப்பொழுது இல்லாததாகிவிட்டது. ஏன் என்றால் வருமானம் உள்ள படிப்பையே எல்லோரும் விரும்புகின்றார்கள்.

எப்படி மீரா, நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற பக்தர்களுடைய சரித்திரத்தை படிப்பதால் தெய்வ சக்தி ஏற்படுமோ, அதுபோல், நம்முடைய தேசத்தின் சரித்திரத்தை படித்தால்தான், சுதந்திரத்திற்காக பல பெரியவர்கள் அந்தமான் சிறைகளிலும் மற்றும் பலவிதத்திலும் பட்ட துயரங்களையும் அனுபவித்த கொடுமைகளையும் தெரிந்துகொண்டால், தேசபக்தியும், சுதந்திரத்தின் அருமையும் தெரிய வரும்.

சுயநலவாதிகள், தங்களுடைய சுயநலத்திற்காக, நாட்டில், மக்களின் உணர்வுகளை தூண்டிவிட்டு அதில் குளிர்காய நினைக்கும் பொழுது, கோபமும், எதிர்க்கின்ற துணிவுவரும். என் இனிய பாரத மாதாவே! நீ பட்ட துயரத்தை நினைக்கும்பொழுதெல்லாம் உன்னை நினைத்து கண்ணீர்விடுகின்றேன். கண்ணன் கூடவே இருந்தும் ஐந்து மஹாபுருஷர்கள் கணவனாக அடைந்தும் எப்படி திரௌபதி அவமானப்படுத்தப்பட்டாளோ அதுபோல் எவ்வளவு தெய்வங்கள் இந்த தேசத்தில் அவதாரம் செய்துதான் என்ன? எவ்வளவு மகான்கள் இந்த தேசத்தில் அவதாரம் செய்துதான் என்ன? எவ்வளவு புண்ணிய நதிகள் ஓடினால்தான் என்ன? எவ்வளவு மோக்ஷபுரிகள் இருந்துதான் என்ன? எவ்வளவு தத்துவங்கள் இருந்துதான் என்ன? எவ்வளவு மஹா க்ஷேத்ரங்கள் இருந்தால்தான் என்ன? நீ பட்ட துயரங்கள் கணக்கில் அடங்காதவை.

அலெக்ஸாண்டருக்கு, தொட்டிலில் இருக்கும்பொழுதே சொல்லிக் கொடுத்த தாலாட்டு, ''இந்தியாவை போய் கொள்ளை அடி'' என்பதுதான். அதற்குப் பின் எவ்வளவு பேர்களால் நீ தாக்கப்பட்டாய், எவ்வளவு பேர்களால் அடிமைப் படுத்தப்பட்டாய்.

ஒரு சமயம், இவ்வளவு தாக்குதலுக்கும் ஆட்பட்டும் கம்பீரமாக உருகுலையாமல் இருக்கும் உன்சக்தியை பார்த்து வியக்கின்றேன். இங்கு ஏன் இவ்வளவு மொழிகள் என்று பலர் ஏளனம் செய்கிறார்கள். ஒரு மொழியை இலக்கண அர்த்தத்துடன் உருவாக்குவது என்பது அவ்வளவு சுலபமான விஷயமல்ல. எங்கள் நாட்டில் அவ்வளவு அறிஞர்கள் இருந்ததாலேயே இவ்வளவு மொழிகள் உண்டாயின. அவ்வளவு அறிஞர்கள் இருந்ததாலேயே இவ்வளவு தத்துவங்களும், தெய்வ உபாசனைகளும் உண்டாயின.

பாரத மாதாவே! உன்னை வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வதெல்லாம், 'உன்னுடைய ஆன்ம பலத்தால் வீறு கொண்டு எழு. இந்தியர்கள் எல்லோருக்கும் மூளையைக் கொடுத்த அளவிற்கு நீ ஏன் முதுகெலும்பை கொடுக்கவில்லை. உன்னுடைய ஆன்மபலத்தை தட்டி எழுப்புவதற்கு, இனம், மொழி, மதம் என்று பிரிந்து நிற்கும் அனைவரையும் பக்தி என்ற ஒன்றால் வழிபாடு என்ற ஒன்றால், அன்பு என்ற ஒன்றால், இணைக்கச் செய். உலகம் முழுவதுக்கும் நீ தலைமை ஏற்று நிற்க வேண்டும்' என்பதாகும்.

வன்முறையே இல்லாத, சுயநலமே இல்லாத, அதேநேரத்தில் கோழைத்தனமும், சோம்பேறித்தனமும் இல்லாத புதிய பாரததேசம் உருவாகட்டும். அதற்கு நாம் எல்லோரும் சேர்ந்து இறைவனுடையப் பெயரைச் சொல்லி மஹாமந்திர கீர்த்தனம் செய்வோம். எல்லோரையும் சொல்ல வைப்போம். இந்தியாவையே நாம கீர்த்தனத்தில் நிரப்புவோம். உலகத்திற்கு தான் கண்ட ஆன்மானந்தத்தை வாரி வழங்கட்டும். பழமையிலே பழுதில்லாத புதுமையைச் சேர்த்து ''நமக்கென நிகர் யார்!'' என விளங்குவோம்.

நம் நாட்டில் தோன்றிய ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ராமதீர்த்தர், ஸ்ரீ ஞானானந்தர், காஞ்சி மகாபெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், பகவான் யோகிராம்சுரத்குமார் போன்ற எண்ணற்ற மகான்கள், இந்தியா வெகுவிரைவில் உலகின் வழிகாட்டியாகும் என்றும், ராமராஜ்யம் மீண்டும் மலரும் என்றும்

கூறியுள்ளார்கள். எந்த ராஜ்யத்தில் உண்மை, தூய்மை, தர்மம், அன்பு ஆகியவை மட்டும் உள்ளதோ அதுதான் 'ராமராஜ்யம்'. பகவான் யோகிராம் சுரத்குமார் அவர்கள் "Ram Rajya is not very far' (ராமராஜ்யம் வெகு தொலைவில் இல்லை) என்று அடிக்கடி சொல்வார்கள். 'வெகு தொலைவில் இல்லை' என்றால், எவ்வளவு தொலைவு? என்பது நம் கையில்தான் உள்ளது. நாம் எவ்வளவுக் கெவ்வளவு நாமகீர்த்தனம் செய்து, பிறரையும் செய்விக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு ராமராஜ்யம் அருகில் வந்துவிடும்'.

மேற்கண்ட உணர்வு பொங்கும் அருளுரையை குடியரசு தினத்தன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நமது ஆஸ்ரமத்தில் வழங்கினார்கள்.

(தொடரும்)

**– ஆ. பாக்யநாதன்**

---

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதி

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O. படப்பை. P.O. 601 301.

ஸ்ரீ பெரும்புதூர். T.K. காஞ்சி மாவட்டம்

ஸகல மங்களங்களையும் அருளும் வரப்ரஸாதியான மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் சந்நதியில் பக்தர்களின் பிரார்த்தனைகள், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் காலையில் பெருமாளிடம் விண்ணப்பிக்கப்படுகின்றன. இந்தப் பிரார்த்தனைகளைப் பெறுவதற்காக, பெருமாள் ஸந்நதியில் ஒரு பிரார்த்தனைப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

பக்தர்கள், தங்களது பிரார்த்தனைகளை வெள்ளைக் காகிதத்தில் எழுதி, உறைமீது ''பிரார்த்தனைப்பெட்டி'' என்று தெளிவாக எழுதி தபாலிலோ நேரிலோ மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். தபால் தலை ஒட்டிய உறைமீது தங்கள் முகவரியை தெளிவாக எழுதி அனுப்பினால், தங்கள் பிரார்த்தனைகளைப் பெருமாளிடம் தெரிவிக்கப்பட்ட பின் பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பிரார்த்தனைப் பெட்டியில் கண்டிப்பாக காணிக்கைகள் எதுவும் செலுத்தக்கூடாது. பிரார்த்தனைகள் மட்டுமே பிரார்த்தனைப் பெட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

-ராதே க்ருஷ்ணா-

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நாம் செய்த பாவ புண்ணியங்களுடைய பலன்களைச் சுவர்க்கம் அல்லது நரகம் போன்ற உலகத்தில் அனுபவித்து விடுவோமானால் மீண்டும் பூமியில் பிறந்து அனுபவிக்க, கர்மாக்கள் ஏது?*

பதில் : வெளி ஊருக்குக் குடும்பத்துடன் சுற்றுலாச் செல்லும் ஒருவன், 'தன்னுடைய பணத்தைச் செலவழிக்கும்பொழுது மீண்டும் ஊருக்குத் திரும்பிப் போவதற்குப் பணம் வேண்டுமே' என்று அந்த அளவு பணத்தைப் பத்திரமாக எடுத்து ஒதுக்கி வைப்பான். அதுபோல், சுவர்க்கத்தில் புண்ணியத்தை அனுபவிக்கும்பொழுது அதில் கொஞ்சமும், நரகத்தில் பாவத்தை அனுபவிக்கும்பொழுது அதில் கொஞ்சமும் பாக்கி வைத்து, அதனுடைய பலாபலன்களை அனுபவிக்கின்றதற்காகத்தான் பூமிக்கு அனுப்புகின்றான். அந்தக் கர்மாவைத்தான் நாம் அனுபவிக்கின்றோம்!

*கேள்வி : ஒருவர் செய்த பாவத்தை மற்றொருவருக்கோ வேறு ஒரு விலங்கிடமோ மாற்றிவிட முடியுமா?*

பதில் : 'தந்த்ர சாஸ்த்ரத்தின் மூலமாக மாற்றி விட முடியும்' என்று சொல்லப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அது மிகவும் ஆபத்தான வழியாகும்!

*கேள்வி : 'பக்தியும் ஞானமும் வேறு வேறு' என்பதுபோல் எல்லாரும் சொல்லி வருகின்றார்களே!*

பதில் : முதலில் பக்தி வருவதற்காகக் கதை கேட்பது, கீர்த்தனம், ஜபம், குருசேவை, பகவானுடைய தொண்டு, தீர்த்த யாத்திரை, க்ஷேத்திர யாத்திரை போன்றவற்றைச் செய்ய வேண்டும். இதனால் தூய்மையான பக்தி வளரும். அப்பொழுது மேனி சிலிர்க்கும். பல காட்சிகளில் வெளியில் பலவிதமாக ஏற்படும். பிறகு பகவானை கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஏற்படும். பிறகு, பகவானுடைய

நேருக்கு நேர் பார்க்க வேண்டும். பிறகு, உள்ளே காட்சி ஏற்பட வேண்டும். சமாதி ஸித்திக்க வேண்டும். சமாதியில் மூழ்குவதும் கலைவதும் உயர்ந்த நிலை அல்ல. சமாதியில் எப்பொழுதும், ஆழ்ந்து, அதே நேரத்தில் உலக விஷயங்களில் சஹஜமாக இருக்க வேண்டும். அதற்குத்தான் சஹஜ சமாதி என்று பெயர். இதுதான் துரீய நிலையில் அனுபவிக்கக் கூடிய பக்தி. ஆகவே, முடிவில் அனுபவிக்கக் கூடிய ஞானமும் பக்தியும் ஒன்றுதான்!

*கேள்வி : 'காரம்பசு' அதாவது முழுவதும் கறுப்பாக உள்ள பசுமாட்டின் பால், பூஜைக்கு உகந்ததாகச் சொல்லப்பட்டது ஏன்?*

பதில் : நம்முடைய அறிவுக்குப் புரியாத பல விஷயங்களைச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவை போகப் போக விஞ்ஞானத்தினால் நிரூபிக்கவும் படலாம்! சாஸ்திரங்கள் ஒவ்வொரு வர்ணம் உடைய மாட்டினுடைய பாலுக்கு தனித்தனியான விசேஷமான தன்மைகள் உண்டு என்று கூறுகின்றன.

ஸ்ரீ ஹரி:

**மஹாமந்திர நாமகீர்த்தன**
**கூட்டுப் பிரார்த்தனை - திருச்சி**

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாசியுடன், உலக அமைதி வேண்டியும், எல்லாவித நன்மைகள் ஏற்படவும், ''ஹரே ராம....'' மஹா மந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில், அகண்ட

**''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே!**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!''**

மஹாமந்த்ர நாமகீர்த்தன கூட்டு பிரார்த்தனை 10-3-2007 அன்று மாலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை, Garbba Rakshagi Mahal (Mangal Mahal) 3-A, Reynolds Road, Contonment, Trichy - 620 001. (Court Bus Stop; Route : Uraiyur) நடைபெற இருப்பதால் இதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தொடர்புக்கு :

**Sri. S. RAMACHANDRAN**
Ph. : 0431-2436299; Cell : 94864 93791 / 93803 38951

# மாதம் ஒரு புத்தகம்

உலகிலுள்ள எண்ணற்ற ஜீவராசிகளின் பேரில் கொண்ட பரம கருணையினால் அவர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் தமது மகிமைகளையெல்லாம் மறைத்துக்கொண்டு, பூமியில் அவதரித்து, நம்மில் ஒருவராகக் கலந்து பழகி, பேசி, வாழ்கின்றார். அப்படி அவதரிக்கும்பொழுது, யாரும் தம் உண்மையான ரூபத்தை அறியாத வண்ணம் தாமே ஒரு மாயத்திரையால் தம்மை மறைத்துக் கொள்கின்றார். இருப்பினும், அவரது அருளால் ஒரு சிலருக்கு மட்டும் அந்தக் காலகட்டத்திலேயே அவரது ஸ்வரூபத்தை உணர்ந்து, பேரானந்தத்தை அனுபவிக்கும் பெரும் பேறு கிடைக்கின்றது!

இந்தப் பூவுலகில் நடமாடும் தெய்வமாக அவதரித்த காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவர்கள் ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளால், 64-ஆம் நாயன்மார் என்று போற்றப்பட்டவரும், ஸ்ரீ மஹாஸ்வாமிகளைச் சிவபெருமானாகவே உணர்ந்த நிகரற்ற பக்தரும், எல்லாராலும் அன்புடன் ''பிரதோஷம் மாமா'' என்று அழைக்கப்பட்டவருமான 'பிரதோஷம்! ஸ்ரீ வெங்கட்ராமன், என்ற பெரியவரின் வாழ்வில் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் நிகழ்த்திய அருள்விளையாடல்கள் அடங்கிய 'தந்தது உன்தன்னை! கொண்டது என் தன்னை!' என்ற சுவையான நூலைப் படிக்க நேர்ந்தது!

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிவபெருமானை அழைத்து அவரிடம், ''உன்னையே எனக்குத் தந்தருளி, அதற்கு ஈடாக என்னை நீ ஏற்றுக்கொண்டாய்! உன்னை அடைந்ததால் எனக்குப் பேரானந்தம்! என்னை அடைந்ததால் நீ பெற்றது யாதுமில்லையே!'' என்று பாடுகின்றார். இதற்கு நிகரான ஓர் அற்புதச் சம்பவம் ஸ்ரீ பிரதோஷ மாமா அவர்களின் வாழ்விலும் நிகழ்ந்தது.

வழக்கம்போல் அன்றிரவும் ஸ்ரீ மாமா அவர்கள் ஸ்ரீ ஸ்ரீ மஹாபெரியவர்களின் சன்னதியிலேயே உறங்கினார். அன்று ஏனோ சரியாக உறக்கம் வரவில்லை! அதிகாலை ஸ்ரீ மஹா பெரியவர்களின் விஸ்வரூப தரிசனத்திற்காக மனம் ஏங்கிக்

கொண்டிருந்தது. அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் விஸ்வரூப தரிசனம் கிடைத்தது.

அப்போது ஸ்ரீ மஹாப் பெரியவர்கள்,

***''தந்தது உன் தன்னை! கொண்டது என் தன்னை!''***

என்று ஸ்ரீ பிரதோஷம் மாமாவைப் பார்த்துத் திருவாய் மலர, அவரும் அதைத் திரும்பச் சொன்னார்! இப்படி ஒருமுறை ஸ்ரீ மஹா பெரியவர்கள் ஒருவரைப் பார்த்துச் சொன்னாலேயே, அந்த நபரின் பாக்கியத்தை விவரிக்கவும் முடியுமோ? ஆனால், காலை 4.00 மணி முதல் காலை 6.30 மணி வரை, இடைவிடாத மந்திர ஜபம் போல், 'தந்தது உன் தன்னை; கொண்டது என் தன்னை!' என்று ஸ்ரீ மஹா பெரியவர்கள் சொல்ல, ஸ்ரீ பிரதோஷம் மாமா திரும்பி உரைத்தார். மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் தந்தருளிய அனுபவத்திற்குத் துல்லியமான அனுபவத்தை ஸ்ரீ மஹாப்பெரியவர்கள் ஸ்ரீ பிரதோஷம் மாமாவிற்கு வழங்கினார்கள்.

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**

*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# யூத மதமும், யூதர்களும் - ஓர் சிறிய அறிமுகம்

*மதுரமுரளியில் நம் ஸனாதன மதத்தைப் பற்றிய பல அரிய விஷயங்கள் மற்றும் வேதம், இதிஹாஸம், புராணம் இவற்றின் சாரம் முதலியவை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருள்மொழிகள் பகுதியில் இடம் பெற்று வந்துள்ளன.*

*'உலகின் புராதனமான மற்ற மதங்கள், கலாசாரங்கள் பற்றியும் ஓர் சிறிய அறிமுகம் நம் மதுரமுரளியில் இடம் பெறவேண்டும்' என்பது ஸ்ரீ ஸ்வாமிஜியின் அவா. அதன்படி இந்த இதழில் யூதமதத்தைப் பற்றிய ஓர் சிறிய அறிமுகத்தை டாக்டர் ஆ. பாக்யநாதன் கொடுத்திருக்கின்றார்.*

*- ஆசிரியர்*

---

உலகின் மிகப் பழமையான மதங்களுள் ஒன்று யூத மதம். இன்றைய நிலவரப்படி, உலகம் முழுவதும் உள்ள யூதர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 14 மில்லியன்கள். இந்தக் கணக்கின்படி, யூத மதம் உலக மதங்களில் எண்ணிக்கை அடிப்படையில் 11ஆவது இடத்தை வகிக்கின்றது. ஹீப்ரூ பைபிளின்படி, (HEBREW BIBLE) ஹீப்ரூ இனத்தவர்களின் மதமான யூதமதம் சுமார் 4000 வருடங்களுக்கு முன் ஆப்ரகாம் (ABRAHAM) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டு, மீண்டும் கி.மு. 1200-இல், மோசஸ் (MOSES) என்பவரால் புனரமைக்கப்பட்டுள்ளது.

**மையக் கோட்பாடு :**

யூதமதத்தின் மையக் கோட்பாடு என்னவென்றால், ''கடவுள் என்பவர் ஒருவரே! அவர் எங்கும் நீக்கமற நிறைந்தவர். எல்லாம் அறிந்தவர். ஸர்வ வல்லமை பொருந்தியவர். இந்தப் பிரபஞ்சமானது அவரால் படைக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அந்த ஒரே பரம்பொருளால் கொடுக்கப்பட்ட கோட்பாடுகளின் தொகுப்பே 'டோரா' (TORAH). அந்தக் கோட்பாடுகளைப் படித்து, அதன்படி வாழ்வதுதான் யூதர்களின் குறிக்கோளாகும்.''

**யார் யூதர்கள்?**

'யூதர்' என்ற சொல் 'யெஹுதீ' (YEHUDI) என்ற ஹீப்ரூச் சொல்லிலிருந்தே தோன்றியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தீர்மானித்து உள்ளார்கள். சாலமோன் (KING SOLOMON) என்ற அரசனின் ஆட்சிக்குப் பின்னர், இஸ்ரேல் நாடு, இரண்டாகப் பிளவுற்றது. வட பிரதேசம் இஸ்ரேல் என்றும் தென் பிரதேசம் ஜூடா (KINGDOM OF JUDAH) என்றும் வழங்கப்பட்டன. வடப் பிரதேசமான இஸ்ரேலை அஸ்ஸீரியர்கள் (ASSYRIANS) கைப்பற்றிய பின், யூதர்களின் நாடாக எஞ்சியது, 'ஜூடா' (JUDAH) மட்டுமே! அந்த நாட்டவர்கள் யெஹுதி 'YEHUDI' என்று அழைக்கப் பட்டார்கள். நாளடைவில் அந்தப் பெயரே மருவி 'யூதர்கள்' (JEWS) என்று வழங்கி வருகின்றது!

இன்றைய நவீன விளக்கப்படி, யூதர்களை மூன்றாக பிரித்துவிடலாம்.

1. யூதராகப் பிறந்து, யூத மதத்தைப் பின்பற்றுபவர்கள்.
2. யூதராகப் பிறந்து, கலாச்சார ரீதியாக மட்டும் தங்களை யூதர்களாகக் கருதுபவர்கள். இவர்கள் யூதமதத்தைப் பின்பற்றாதவர்கள்!
3. யூதராகப் பிறக்காவிடினும், யூத மதத்தைப் பின்பற்றுபவர்கள்.

இம்மூவரையுமே நவீன சிந்தனையாளர்கள், யூதர்களாகக் கருதுகிறார்கள். பழமைவாதிகள் என்று கருதப்படும் ஒரு சாரார், யூத பெற்றோர்களுக்குக் குழந்தைகளாகப் பிறந்தவர்களை மட்டுமே யூதர்களாக ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், ஒருவர் யூதராகப் பிறந்துவிட்டாலோ, யூத மதத்திற்கு மாறிவிட்டாலோ, அன்றிலிருந்து அவர் நிரந்தரமாக யூதராகிவிடுகின்றார்! அதன்பின்னர், அவர் யூத மதக்கோட்பாடுகளைப் பின்பற்றாவிட்டாலும், நாத்திகரானாலும், வேறு மதத்தைப் பின்பற்றினாலும் அவர் நன்னடத்தை தவறிய யூதராகவே கருதப்படுகிறார்!

### யூதர்களின் மொழி

ஹீப்ரு (HEBREW) மொழிதான் யூதர்களின் புனிதமொழியாகக் கருதப்படுகின்றது. யூத மத நூல்கள் அனைத்துமே இந்த மொழியில் தாம் உள்ளன. கி.மு.500 முதல் ஹீப்ருவிலிருந்து தோன்றிய 'அரமெய்க்' (ARAMAIC) என்ற மொழியே யூதர்கள் அன்றாடம் பேசும் மொழியாகிவிட்டது. அதன் பின்னர் சிலகாலம் கிரேக்க மொழி வழக்கில் இருந்தது. இன்று ஹீப்ரு மொழியும், அரேபிய மொழியும் இஸ்ரேலின் தேசிய மொழிகளாக வழங்கி வருகின்றன. இன்று மீண்டும் ஹீப்ரு மொழி யூதர்களிடையே புத்துயிர் பெற்றதற்கு முக்கியக் காரணம், 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எலிசர் பென் யெஹுதா (ELIEZER BEN YEHUDA) என்பவரின் முயற்சியாகும்.

*- தொடரும்*

**– டாக்டர் ஆ. பாக்யநாதன்**

---

ஸ்ரீ ஹரி:

**சந்தாதாரர்கள் கவனத்திற்கு**

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, M.O. அல்லது D.D. – ஆக **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''** என்ற பெயரில் மட்டுமே, New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083, Telephone : 044-24895875, email ID : publications@madhuramurali.org என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : ஆண்டு சந்தா ரூ. 120/-
  ஆயுள் சந்தா ரூ. 2000/- (20 வருடங்கள்)
  வெளி நாடு : வருட சந்தா ரூ. 600/-

- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண், மதுரமுரளி கவர்மீது உள்ள முகவரியில் இரண்டாம் வரியில் உள்ளது.

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்-19

**– குடந்தை என். ராமசர்மா**

சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள வர்ணாசிரம தர்மரூபமான கர்மங்கள் ஒருவகை. பறவை, விலங்கு, மனிதன் போன்ற எல்லா உயிரினங்களிடத்திலும் எப்போதும் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் பசி, தாகம் போன்றவை மற்றொரு வகை. முதல் வகைக்கு விஹித கர்மா எனப்பெயர். இரண்டாவது வகைக்கு ஸ்வாபாவிக ஆஸங்கம் என்று பெயர். அதாவது இயல்பிலேயே எழும் உந்துணர்வுகள்; இவ்வுணர்வுகளின் வெளிப்பாடுகளும் செயல்களே, கர்மங்களே.

இரண்டற்ற ஏகதத்துவத்தில் நிலைபெற்று அதையே நீக்கமற எங்கும் காணும் ஞானியிடம் முதல்வகைக் கர்மங்கள் நழுவி விடும். இரண்டாவது வகை செயல்களிலும் இவரது நடத்தை, 'ரோபோ' போன்றிருக்கும். நான், எனது இரண்டும் கழன்ற அவித்யையைத் தொடர்ந்து வரும் தூக்கம் நம்மை ஆட்கொண்டதும், நாம் பற்றிக்கொண்டிருப்பவை யாவும் நம்மை விட்டு நழுவிவிடுகின்றன.

அதுபோல், ஞானத்தில் விழித்துக்கொண்டவன் இவன் ஞான வெளிச்சத்தில் இவன் விழித்துக்கொள்ளும்போது, அவித்யா உறக்கத்தில் பற்றிக்கொள்ளப்பட்டவைகளும், கனவு போன்ற நிஜவுலக அனுபவங்களும் கழன்று விடுகின்றன. ''அக்ஞான இருட்டு இருக்கும் வரையில்தான் பேதபுத்தியும், அதனால் எழும் கர்மங்களும் இருக்க முடியும்'' என்கிறார் ஆச்சாரிய சங்கரர்.

ஆச்சரியமாக அல்லவோ இருக்கிறது. வெளிச்சம் வந்தால்தான் நமக்கு தொழிலே. இருட்டிலே முடங்கிக் கிடக்கிறோம். இருட்டு இருக்கும் வரையில்தான் கர்மங்களே என்கிறார். நிஜமும் இதுதான். அக்ஞானத்தால் தூக்கம் வருகிறது. கனவு எழுகிறது. இரண்டு நிலைகளிலும் நமக்கு, நான், எனது என்ற இரண்டும் இல்லை. நான் கனவு காண்கிறேன் என்ற நினைப்பு கிடையாது, நான் தூங்குகிறேன் என்ற எண்ணமும் இல்லை. எனது கனவு, எனது உறக்கம் என்ற பாதிப்புகளும் இல்லை. அஞ்ஞானிக்கு இரவு வந்தால்தான்

உறக்கம். உறக்கம் வந்தால்தான் உலகம் நழுவுகிறது. ஞானிக்கோ ஞானம் பிறந்தால் உலகம் மறைகிறது. ஆத்மசொரூபமே மிஞ்சுகிறது.

*யநிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்திஸம்யமீ ।*
*யஸ்யாம் ஜாக்ரதிபூதாநிஸாநிசா பச்யதோமுநே: ॥*

''எல்லா உயிர்களுக்கும் எது இரவோ அதில் மனம் அடங்கியவன் விழிப்புடையவராய் இருக்கிறான். எதில் உயிர்கள் விழிப்புடையனவோ அது உண்மையைக் காணும் முனிவனுக்கு இரவாகும்?

எது இரவு? எந்தவொரு பொருளையும் பகுத்தறிய முடியாமல் தமஸ்ஸாகிற இருட்டால் எது மூடப்பட்டிருக்கிறதோ அது இரவு.

*யா நிசா ராத்ரி: ஸர்வ பதார்த்தா நாம்*
*அவிவேககரீதம ஸ்வபாவத்வாத் ॥*

ஞானம்பெற்றவனுக்கோ இது பகல்.

கோட்டானின் பகல் காக்கைக்கு இரவு. காக்கையின் பகல் கோட்டானின் இரவு. அக்ஞானியால் விவேக விஞ்ஞானம் இல்லாமையால் உண்மைத் தத்துவம் காணப்பட முடிவதில்லை. இவனைப் பொருத்த வரையில் இது இரவு. ஞானிக்கு உண்மைத் தத்துவம் புலனாவதால் இதுவே பகலாகிறது.

*அக்ஞான நித்ராயா ப்ரபுத்த: ஜாகர்தி ॥*

தடபுடலாக எல்லா விவகாரங்களோடு இயங்கிக்கொண்டு இருப்பது ஸ்தூல பிரபஞ்சம். இது துவைத பிரபஞ்சம். உண்மை தத்துவத்தின் இருப்பன மறைவதால் உண்மைத் தத்துவத்தைக் காணும் யோகிக்கு இது இரவாகிறது. பகவத்பாதர் கூறும் அழகே தனிதான்.

காணும் பிரபஞ்சம் ஐந்து விஷயங்களில் தோற்றமே. அவை ஸத், சித், ஆனந்தம், நாமம், ரூபம் ஆகும். முதல் மூன்றும் அதிஷ்டானம், மாறாதது. நிலையானது. பின்னிரெண்டின் தோற்றத்திற்கும் இருப்பிற்கும் ஆதாரமானது. நாமரூபங்கள் மாறும். அதிஷ்டானமான மூன்றும் மாறாது.

ஒரு தங்க நகையைப் பார்க்கிறோம். சங்கிலி, வளையல், மோதிரம் என பல பெயர்களில் பல வடிவங்கள். நாம் பார்க்கும் போது தங்கத்தைத்தான் பார்க்கிறோம். ஆனால், நாம ரூபங்கள் அதிஷ்டான தங்கத்தை மறைத்து நாம ரூபங்களாகவே தோன்றுகின்றன. அதிர்ஷ்டான தங்கத்தைப் பார்க்கும்போதோ நாமரூபங்கள் மறைந்துவிடுகின்றன.

ஆதாரமான உண்மைத் தத்துவத்தைப் பார்க்கும் ஞானிக்கு நாம ரூபங்கள் பொருட்டல்ல. மதிப்பு என்னவோ ஆதாரமான தங்கத்திற்குத் தானே! நாம ரூபங்களோடு நின்றுவிடும் அக்ஞானிக்கு ஆதார 'ஸத்'தையான அதிஷ்டானம் இருட்டுதானே. அதிஷ்டானத்தைக் காணும் ஞானிக்கு மறைந்து போகும் நாமரூபங்கள் இருட்டுதானே!

சங்கிலியை அழித்து வளையல் செய்யலாம். அதை அழித்து அட்டிகை செய்யலாம். பெயரும் உருவமும் மாறும். ஆதாரமான தங்கம் மாறாது. நாமரூபங்கள் இன்றி அதிஷ்டான தங்கம் இருக்கும். அதிஷ்டான தங்கமின்றி நாம ரூபங்களுக்குத் தனியான இருப்பு கிடையாது.

அதிஷ்டானத்தைப் பார்ப்பவன் ஞானி. நாமரூபங்களோடு நின்றுவிடுபவன் அக்ஞானி. தத்துவத்தைக் காணும் யோகிக்கு நாமரூபப் பிரபஞ்சம் இரவாகிறது. நாமரூபப் பிரபஞ்சத்தை மட்டும் காணும் ஸம்ஸாரிக்கு அதிஷ்டானம் இரவாகிறது. அக்ஞானத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் 'அவித்யை' எனும் உபாதையோடு கூடிய ஜீவனின் கனவு ஸ்தூலப் பிரபஞ்சம். கண்டுகொண்டிருக்கும் வரையில் கனவு நிஜம்தானே! விழித்துக்கொண்டால்தானே இதுவரையில் பார்த்தது கனவு என அறிய முடிகிறது.

*... வளரும்*

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 106

ஒரு நாட்டில் ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. பலவிதமான தர்மங்கள் உலகில் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். தன்னுடைய சொத்தை, கண்பார்வை இல்லாதவர்களுக்குச் சிறிது பணம், மன நோயாளி களுக்குச் சிறிது பணம், புற்றுநோயால் அவதிப்படுபவர்களுக்குச் சிறிது பணம் என்று கொஞ்சம் கொஞ்சமாகப் பிரித்து, அதை மூலதனமாகக்கொண்டு, அதிலிருந்து வரும் பணத்திலிருந்து இவற்றைச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

அதன்படி கல்விக்காக, நோயாளிக்காக, இறைவனைக் காண்பதற்காக தங்கள் வாழ்க்கையைத் துறந்த துறவிகளுக்காக என்று, தம்முடைய சொத்துக்களைப் பிரித்து அறக்கட்டளைகளை நிறுவி அந்தப் பிரிவில் உள்ள மூலதன பணத்திலிருந்து அந்தந்தத் தர்மங்களைச் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டு, அந்தப் பெரியவர் இறைவனின் திருவடியை அடைந்துவிட்டார்.

அதற்குப் பிறகு அவருடைய மகன், தந்தை எப்படி ஆசைப்பட்டாரோ அதுபோல், எல்லாருக்கும் தர்மம் செய்துவந்தார். அவரும் இறைவனடியை அடைந்துவிட்டார். அந்தப் பெரியவரின் பேரன் வந்தான். ''தாத்தா தர்மத்திற்குத் தம் சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார். நாம் துறவிகளுக்கு என்று கொடுக்கின்றோமே, இவர்களில் உண்மையான துறவி யார் என்று புரிந்துகொள்ள முடியுமா? சென்று அவர்களை எப்படி அடையலாம் காணமுடியும்? என்று மனம் குழம்பினான். அதனால், அவன் ஒரு பெரியவரிடம், ''நோயாளிகளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விடலாம். கல்விக்காகக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்து விடலாம். இந்த மாதிரியான தர்மங்களைச் செய்துவிடலாம். ஆனால், முற்றும் துறந்த அடியார்கள் இருக்கின்றார்களே. அந்த அடியார்களுக்கு என்று என் தாத்தா அறக்கட்டளை நிறுவியுள்ளார். அதிலிருந்து பொருளை எடுத்து அடியார்களுக்கு, இறைவன்பால் அன்பு வைத்திருப்பவர் களுக்கு என்று சொல்லியிருக்கின்றார். நான் என்ன நினைக்கின்றேன்.

அப்படி அவர்களை அடையாளம் காண்பது முடியாத காரியம். நான் அதை நிறுத்திவிடுகின்றேன். ஏனென்றால், இந்தக் காலத்தில் யாரை நம்ப முடிகின்றது!'' என்று அந்தப் பெரியவரிடம் சொன்னான்.

அந்தப் பெரியவர் அவனிடம், ''நீ அப்படி நினைக்காதே! இவர் நல்லவரா, கெட்டவரா என்று ஆராய்ந்து பார்த்துக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை! உன்னுடைய தாத்தா உண்மையிலேயே துறவிகள்பால், இறையடியார்மேல் அன்புகொண்டவர், அவர்கள் உணவில்லாமல் துன்பப்படக்கூடாது என்ற உயர்ந்த குறிக்கோளிலே, தீர்க்கமாகச் சிந்தித்து, தம்முடைய காலத்திற்குப் பிறகும் அது நடைபெற வேண்டும் என்ற காரணத்தினால் ஓர் அறக்கட்டளையை நிறுவியிருக்கின்றார். இதை நீ சோதித்துப் பார்க்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவருடைய நல்ல எண்ணம், அவருடைய பணத்தை நல்லவரிடம் மட்டுமே எடுத்துச் செல்லும். கவலைப்படாதே!'' என்றார்.

இந்தப் பேரனுக்கு அதில் நம்பிக்கையில்லை! உடனே, அந்தப் பெரியவர், அவனுக்கு உண்மையை உணர்த்துவதற்காக, ''நீ என்ன செய், இரண்டு பூசணிக்காய்களை எடுத்துக்கொண்டு வா! ஒரு பூசணிக்காயை வெட்டி அதனுள், தங்க நாணயங்களை வை! பிறகு அது வெட்டப்பட்டது தெரியாமல் அதைச் சேர்த்துவிடு. மற்றொரு பூசணிக்காயை அப்படியே வைத்துக்கொள்ளலாம்! நான் வீதியிலே சென்று உண்மையான துறவியை அழைத்து வருகின்றேன்! துறவி போல் வேடம் போட்ட ஒருவரையும் அழைத்து வருகின்றேன்! என்ன நடக்கிறது என்று பார்!'' என்றார்.

உண்மையான சாதுவை, அவரை விசாரித்து, இந்தப் பூசணிக்காயைத் தானமாகப் பெறுவதற்கு அழைத்து வந்தார். அதுபோல், உலகத்தில் நல்லவன் அல்லாதவனைத் துறவிபோல் வேடமிட்டு, அழைத்து வந்தார். இருவரையும் இந்தப் பேரன் முன்பாக நிறுத்தினார். நல்ல பண்புகள் இல்லாமல் துறவு வேடம் போட்டுக்கொண்டு வந்தவனுக்குத் தங்க நாணயம் வைக்கப்பட்ட பூசணிக்காயைக் கொடுக்கச் சொன்னார். உண்மையான துறவிக்குச் சாதாரணப் பூசணிக்காயைக் கொடுக்கச் சொன்னார். பிறகு,

அவனிடம், என்ன நடக்கிறது என்று பார்?' என்று சொன்னார். அவர்கள் சற்றுத் தூரம் சென்றார்கள்! ''நல்ல பண்புகள் இல்லாதவன் தன்னிடமுள்ள பூசணிக்காயை அப்படி, இப்படிப் பார்த்தான். அவனுடைய மனதில் என்னவோ தோன்றியது. மற்றொரு சாதுவைப் பார்த்து மிரட்ட ஆரம்பித்தான். 'மரியாதையாக உன் கையில் இருக்கும் பூசணிக்காயை என்னிடம் கொடுத்துவிடு. என்னுடைய பூசணிக்காயை வாங்கிக்கொள்' என்று மிரட்டினான். அவரோ உண்மையான சாது. மிகவும் பயந்துவிட்டார். ''எந்தப் பூசணிக்காயாக இருந்தால் என்ன?'' என்று தம் கையில் உள்ள பூசணிக்காயை அவனிடம் கொடுத்துவிட்டு, அவனுடைய பூசணிக்காயைத் தாம் வாங்கிக்கொண்டார். இந்தப் பேரன் இவையெல்லாவற்றையும் கவனித்துவந்தான்; அதிசயப்பட்டான்! ஆச்சரியமாக இருந்தது! நல்லகுணம் இல்லாதவன் தான் பெற்ற பொருளில் திருப்தியில்லாமல் பூசணிக்காயை மாற்றிக் கொண்டான். இதற்கு காரணம் என்ன? என்று யோசித்தான்.

அதற்குக் காரணம், இவர்கள் யாரும் இல்லை. அந்த அறக்கட்டளையை ஆரம்பித்தவர் ஏதோ விளம்பரத்திற்காக இதை ஆரம்பிக்கவில்லை. தம்மிடம் பணம் இருக்கின்றது என்பதனால் ஏற்படுத்தவில்லை! உண்மையில் உழைத்துச் சம்பாதித்த பணம் உண்மையான அடியார்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற நல் எண்ணத்திலே தான் அறக்கட்டளையை ஆரம்பித்தார். அவருடைய நல்லெண்ணம் தான் இந்தக் காரியத்தை நடத்திக்கொண்டு போகின்றது என்பது உண்மை!

---

ஸ்ரீ ஹரி :

**<u>ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம், மஹாரண்யம், மதுரபுரி</u>**

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம், மஹாரண்யம், மதுரபுரியில் ஜனவரி மாத எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றன.

**- Trustees**

# மாலே மணிவண்ணா - 49

- மஹாவித்துவான் மயிலம். வே.சிவசுப்பிரமணியன்

எம்பெருமான் அறிவுக்கு அறிவாக விளங்குகின்றவன். அறிஞரின் அறிவுக்கு அப்பாற்பட்டவன். அறிவினால் ஆராய்ந்து அறிய முடியாதவன். அறிவே வடிவம் ஆனவன் என்றும் சொல்லப் பெறுபவன். அறிவினும் மேம்பட்டவன். ஆருயிர்களின் அறிவுக்கு அறிவாய் நின்று அறிவிக்கின்றவன். அப்படிப்பட்ட எம்பெருமானைத் துதிக்கின்றவர்கள் தம் அறிவுக்கு எட்டிய வகையில் அறிஞருள் ஒருவனாகக் கண்டு அழைக்கிறார்கள். அத்தகைய அழைப்பே அடுத்த தோத்திரமாக அமைகிறது.

''சொல்லியல் புலவ!'' என்று பகவானை அழைத்துப் பாடும் புலவர் தம்மில் ஒருவராக அப்பெருமானையும் 'புலவ' என அழைத்துப் பெருமானைத் தமக்கு மிகவும் நெருக்கமானவராக ஆக்கிக்கொண்டுவிட்டார் என்றும் சொல்லலாம்.

ஒருவரோடு நமக்கு நெருக்கம் வேண்டும் என்றால் அவரை நம் உறவினராகச் சொல்வோம். நம் நாட்டினராக, நம் மொழியினராக, நம் மதத்தினராக, நம் ஊரினராகச் சொல்கிறபோது அவர் நமக்கு மிகவும் வேண்டியவராக ஆகிவிடுகிறார். நமக்காக எல்லாம் செய்ய வல்லவராகிறார் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! உறவல்லாதவர்களும் ஒரு முறை தம் திருநாமத்தை உரைத்து அழைத்தால் ஓடிவந்து அவர்களுக்குப் பெறமுடியாத பேரின்பமாய பரமபத ஆனந்தத்தைத் தரத் தயாராக இருக்கிற பெருமான் அல்லவா அவர்!

அவரைப் பரிபாடலாற் பரவும் புலவர் தம்மோடு ஒருவராக்கி, ''தொல்லியல் புலவ!'' என்று கூறியது ஓர் நயம். 'தொன்மையான இயற்தமிழில் சிறந்து விளங்குகின்ற புலவனே!' என்று பகவானை அழைக்கிறார்.

திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானைத் தோத்திரம் செய்யும்போது நக்கீரரும், ''மாலை மார்ப! நூல் அறி புலவ!'' என்று

இவ்வாறு அழைப்பது காணலாம். மாமனாக உள்ள திருமால் தொல் இயல்புலவராக இருந்தபடியால், தமக்கு மாப்பிள்ளையைத் தேடுகின்றபோது, தம்மைப் போன்ற புலமை மிக்க மருமகனைத் தேர்ந்தெடுப்பது உலகியலில் நிகழக்கூடியதுதான். ''மாலோன் மருகனை'' என்றார் அருணகிரியார்.

சங்ககால இலக்கியங்களாகிய பரிபாடலும், திருமுருகாற்றுப் படையும் திருமாலையும் முருகப் பெருமானையும் புலமைச் செல்வர்களாகத் தோத்திரம் செய்வதில் ஓர் உண்மையும் உண்டு. இருவர்க்கும் 'தமிழறியும் பெருமான்' என்னும் பெயர் இயல்பாகப் பொருந்தியுள்ளமையைத் தமிழக வரலாறு சொல்கிறது.

சிவ பூஜையில் சிந்தனை தவறியவர்களைச் சிறையில் அடைத்தது ஒரு பூதம். பொய்கைக் கரையில் பூசை செய்வார்கள். அப்பொய்கையின் கரைமேல் ஓர் அரசமரம். அதன் இலை பொய்கையில் விழும், உடனே அந்த இலை மீனாகிவிடும்! கரையில் விழுந்தால் கொக்கு ஆகிவிடும்! இந்த வேடிக்கையைப் பார்த்து, சிவ பூசையில் சிந்தனை தவறுவார்கள்! தவறியவர்களை பூதம் சிறைசெய்து, ஆயிரம் பேர் ஆனவுடன் புசிப்பது' என்று நினைத்துப் பாதுகாத்து வந்தது!

கயிலைக்கு யாத்திரைச் சென்ற நக்கீரர் வழியில் அந்தப் பொய்கையில் சிவபூசைக்கு அமர்ந்தார். அந்த நேரத்தில் ஓர் அரச இலை விழுந்தது! தரையில் பாதியும் தண்ணீரில் பாதியுமாக விழுந்தது! தரையில் விழுந்த பாதி கொக்காயிற்று! தண்ணீரில் விழுந்த பாதி மீனாயிற்று! இரண்டும் ஒன்றையொன்று இழுத்தன! இந்த வேடிக்கையைக் கண்டு வியந்து, சிவபூசையில் சிந்தனை தவறினார் நக்கீரர்! பூதம் அவரைக் குகையில் அடைத்தது! பூதத்தின் கணக்கு ஆயிரம் ஆயிற்று! சிறையில் இருந்தவர்கள் எல்லாரும் நக்கீரரை வைதனர்! நக்கீரர் மனம் வருந்தி, தம்மைச் சிறைவீடு செய்ய முருகப் பெருமானைத் திருமுருகாற்றுப் படை பாடி அழைத்தார். அவன் தமிழறியும் பெருமான். நக்கீரர் பாடிய 'நீதி நூல் மங்காமலே' அனைவரையும் சிறைவீடு செய்து, 'நூலறி புலவனாக' ஆனான்!

*(தொடரும்)*

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

ஸ்ரீ அத்வைததாஸ்பாபாவினுடைய குருவான ஸ்ரீ மனோ ஹரதாஸ் தம்முடைய அனுபவத்தைக் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

ஸ்ரீ மனோஹரதாஸ்பாபா, ஏழு வீடுகளில் மதுகரி பிக்ஷை வாங்கி, அதையும் மற்ற ஸாதுக்களுடன் பகிர்ந்து உண்பார். சில தினங்களுக்குப் பின் அவர் வெறும் ஆட்டா எனப்படும் கோதுமை மாவை மட்டுமே பிக்ஷையாக ஏற்று, அதைத் தண்ணீரில் பிசைந்து உண்ணலானார். ஒருநாள், அவர் கோவிந்தகுண்டத்தின் கரையில் அமர்ந்து பஜனை செய்துகொண்டிருந்தபோது, அவர் மனம் வேதனைக்குள்ளானது. இவ்வளவு செய்தும் தனக்குக் க்ருஷ்ண கிருபை கிடைக்கவில்லை என்று அவர் தம்மைத்தாமே நிந்தித்துக் கொண்டார்.

அப்போது அவருக்கு ஒரு விசேஷ தரிசனம் ஏற்பட்டது. அவர் கோவர்த்தன மலையினுடைய குகையிலிருந்து ஒரு மஹாத்மா வெளிவருவதைக் கண்டார். அந்த மஹானுடைய ஒவ்வோர் எலும்பும் வெளியில் தெரியும் அளவிற்கு அவர் இளைத்திருந்தார். வயிறும் முதுகும் ஒட்டிக்கொண்டிருந்தன. கந்தல் அணிந்து அவர், வைராக்யமே உருவெடுத்து நடந்து வருவதுபோல் காட்சியளித்தார். அந்த மஹான், கோவிந்தகுண்டத்தில் நீராடிவிட்டு செய்து, தம்முடைய தீர்த்தப்பாத்திரத்தில் நீரை நிரப்பிக்கொண்டு அங்கிருந்த கிரிதரனுக்கு அந்த நீரால் திருமஞ்சனம் செய்தார். திருமஞ்சன தீர்த்தத்திலிருந்து இரண்டு கை ஜலம் எடுத்து அருந்தினார். பிறகு அவர் ஓவென்று அழத்தொடங்கினார். - ''க்ருஷ்ணா! இன்னும் நான் உன்னை அடையவில்லை! இருந்தும் நான் இன்னும் இப்படியே எவ்வளவு நாள் உயிர் வாழ வேண்டும்?'' என்று தம்மைத் தாமே நிந்தித்துக்கொண்டார். மீண்டும் குகைக்குள் சென்றுவிட்டார்.

மனோஹரதாஸ்பாபாவிற்கு மூன்று நாட்கள் இந்த முறையிலேயே அந்த மஹானுடைய தரிசனம் ஏற்பட்டது. அப்பொழுது அவர், ''மூன்று நாட்களாக வெறும் நீரை மட்டுமே அருந்திவரும் இவருக்கே இதுவரை இறையனுபவம் ஏற்படவில்லை! நான் என்னுடைய வைராக்யத்தைப் பெரிதாக எண்ணிக்

கொண்டிருக்கிறேனே!'' என்று எண்ணினார். அப்போதே அவருடைய அபிமானம் ஒழிந்தது. மேலும் இச்சம்பவத்திலிருந்து அவர் 'வறட்டு வைராக்யத்தினால் ஒன்றும் அடைய முடியாது' என்பதை உணர்ந்து கொண்டார்.

ஸ்ரீ அத்வைததாஸ்பாபா கீர்த்தனங்களின்பொழுது அசாதாரணமான **பா**வத்தில் ஆழ்ந்துவிடுவார். ஒருமுறை மஹாப்ரபுவினுடைய சரித்ரத்தை நாடகமாகச் சில நாட்கள் ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் நடித்துக்கொண்டிருந்தார்கள். ஒருநாள், மஹாப்ரபுவினுடைய தந்தையான ஸ்ரீ ஜகன்னாத்தின் மறைவுக்குப் பின் சசிமாதாவினுடைய விரஹத்தை அபினயித்து நாடகம் முடிவுற்றது. இதைக்கண்ட அத்வைததாஸ் பாபாவுடைய ஹ்ருதயம் **பா**வாவேசம் அடைந்தது. மேலும், விரஹத்தினால் அவர் வாயிலிருந்து இரத்தம் வர ஆரம்பித்துவிட்டது. இதைக் கண்ட அக்குழுவினர் நாடகத்தை மேலும் நடத்தி, அடுத்த கட்டத்தில் போய் நிறுத்தினர். அப்பொழுது தான் அவருக்கு நினைவு திரும்பியது.

ஒருநாள் ஸ்ரீ அத்வைததாஸ்பாபா கோவிந்தகுண்டத்தின் தென் கரையில் அமர்ந்து கண்களை மூடி பஜனையில் ஆழ்ந்திருந்தார். க்ருஷ்ணரும் பலராமரும் மாடுமேய்த்துத் திரும்பி வந்து கொண்டிருக்கும் காட்சியை அவர் பாவாவேசத்தில் கண்டார். அவர்கள் கண்களிலிருந்து மறையும் வரை அந்தக் காட்சியையே வைத்த கண் வாங்காமல் மனக்கண்ணில் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் மறைந்தபின், கோவிந்த குண்டத்தின் அக்கரையில் உள்ள ஒரு மரத்தின் ரூபத்தில் ஒரு பக்தனும் இக்காட்சியைக் கண்டபின் மயங்கி விழுவதைத் தம் மனக்கண்ணில் கண்டார். இதன் பின்பு அவர் வெறிக் ண்களைத் திறந்தார். குண்டத்தினுடைய அக்கரையை அடைந்து அவர் சற்று முன்வரை பச்சைப் பசேரென்றிருந்த ஒரு மரம் விழுந்திருப்பதைக் கண்டு அதிசயப்பட்டார். இதுபோன்ற அநேக திவ்ய காட்சிகளை அவர் காண்பார்.

சில தினங்களுக்குப் பின்பு அவர் ராதா குண்டத்தின் அருகில் வாசம் செய்து அங்குள்ள பக்தர்களை ஸ்ரீமத் பாகவதம், பஜனை இவற்றினால் ஆனந்தப்படுத்தினார். அவருடைய குருவான ஸ்ரீ விஷ்ணுதாஸர் ஸித்தியடைந்துவிட்டதை அறிந்து அவர் விரஹத்தில் துடித்தார். அப்போது விஷ்ணுதாஸ் அவருக்குக்

கோவிந்த குண்டத்திலுள்ள துளஸி மாடத்தின் கீழ் தரிசனம் தந்து, அவரைச் சமாதானப்படுத்தினார்.

1962-ஆம் வருடம் பங்குனி மாதத்தின் க்ருஷ்ண பக்ஷத்தில் தம்முடைய எல்லாச் சிஷ்யர்களையும் தம்மை வந்து பார்க்குமாறு ஸ்ரீ அத்வைததாஸ்பாபா ஆணையிட்டார். எல்லாரும் வந்தனர். அவர்களிடம், ''என்னுடைய தீக்ஷா குரு என்னை அழைத்துச் செல்ல வந்துள்ளார். ஏகாதஶி அன்று இரவில் நீங்கள் பஜனை செய்யும் பொழுதே நான் குருதேவருடன் ஸ்ரீ ஸ்ரீ நிதாயி - கௌர் சரணத்தை அடைவேன்'' - என்று கூறினார்.

அவர் கூறியதைப் போலவே அவர் பகவத் சரணங்களை அடைந்தார்.


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம் - மதுரபுரி**

ஸ்ரீ ஸாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம் மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

- Trustees



## அறிவிப்பு

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** :

(5 வரிகள் / 40 வார்த்தைகள்)
¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : ''மதுரமுரளி'',
குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 131

*''நின்னெரி எரித்தெனை நீறாக்கிடுமுன்
நின்னருள் புரி அருணாசலா''*

உத்தம பக்தர்கள் தங்களது விரஹத்தினால் இறைவனிடம் இரண்டறக் கலந்துவிடுகின்றனர். இந்த உத்தம பக்தியினால் ஏற்படும் அக்னியானது மீரா, ஸ்ரீதர அய்யாவாள் போன்ற மஹான்களின் சரித்திரங்களில் அவர்களின் சரீரத்தையே எரித்து விடுகிறது என்பது தெரிகிறது. ''இப்படி, சரீரம் விரஹத்தினால் மறைந்துவிடும் முன் வந்து அருள் செய்துவிடு, இறைவா'' என்பதைப் போல இருக்கிறது.

''தூல ரீதியாகப் பார்த்தால், சரீரம் மரணம் அடையும்முன் வந்து அருள் செய்துவிடு, அருணாசலேஸ்வரா'' என்று பொருள்படுகிறது. சரீரம் மரணம் அடையும் முன்னர் ஒருவர் இறைவனின் திருவடியை அடையவில்லை என்றால், மறுபடி பிறப்பு எடுக்கவேண்டி நேரும் என்பதில் ஐயமில்லை. மேலும், அப்படிப் பிறப்பு ஏற்பட்டாலும் அது எத்தகைய பிறப்பாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அதுவும் பக்தி செய்வதற்கு அனுகூலமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. மேலும், மனிதப்பிறவிதான் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. மனிதப்பிறவி மிக உயர்ந்த பிறவி என்பது மஹான்களின் ஒட்டு மொத்த அபிப்ராயம். இது கிடைப்பது மிக அரிது என்று ஔவையாரும் ''அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது!'' என்று பாடுகிறார். இப்படிப்பட்ட மனிதப் பிறவியை வீணடிக்கலாகாது!

மரணம் வரும்முன் இறைவனின் அருளைப் பெறவேண்டும் என்பதைக் கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர் மிக அழகாகச் சொல்கிறார். அதுவும் படிப்படியாகச் சொல்கிறார்.

*''கூகா என என் கிளை கூடி அழ
போகா வகை மெய்ப்பொருள் பேசியவா''*

''முருகா! உயிர் பிரிந்தபின், உறவினர்கள் எனது உடலை மயானத்தில் வைத்து எரித்துவிடுவர். அப்பொழுது 'கூ, கா, எனச்

சத்தம் போட்டு அழுதுவிட்டுச் சென்றுவிடுவர். அதனால், நீ இன்று வந்து எனக்கு அருள் புரிகிறாயோ இல்லையோ எனக்கு மரணம் வந்தபின் மறக்காமல் வந்துவிடு!'' என்கிறார். உறவினர்கள் மயானத்தில் வந்து அழுதுவிட்டுச் செல்வதால் தனக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை. முருகனின் அருள்தான் தன்னைக் கரையேற்றும் எனத் தெளிவுபட உரைக்கிறார்.

அடுத்தபடியாக,

> *''கார்மாமிசை காலன் வரிற் கலபத்*
> *தேர் மாமிசை வந்தெதிரப் படுவாய்''*

என்கிறார். அஃதாவது உயிர் பிரிந்து, உறவினர்கள் உடலை மயானம் கொண்டு சென்று எரித்துவிட்டுச் சென்றபின் வருவதைவிட, 'முருகா! நீ உயிர் பிரியும் முன்னே வந்துவிடு!' என்கிறார்.

''கார்மா மிசை காலன்'' - கரிய உருவம் கொண்ட எமன், உயிரைக் கொண்டு செல்வதற்காக வரும்பொழுது, மற்றொரு பக்கமாக நீ வந்துவிடு, முருகா! என்கிறார். உயிர் பிரியும்பொழுது எமதூதர்கள் வருவது உண்மை என்பதும், அவர்கள் கரிய, பயங்கர உருவம் கொண்டவர்களாக இருப்பர் என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

அருணகிரிநாதர் இப்படிச் சொன்னதோடு நின்றுவிடவில்லை. ''உயிர் பிரிய வேண்டிய நேரம் வந்து, எமன் வந்த பின்தான் முருகா! நீ வரவேண்டுமா?'' என்னும்படி பின்வருமாறு பாடல் பாடுகிறார்:-

> *''சாகாதெனையே சரணங்களிலே*
> *காகா நமனார் கலகம் செயும் நாள்*
> *வாகா முருகா மயில்வாகனனே''* என்கிறார்.

என்றும் உனது சரணங்களிலேயே பக்தி பூண்டு, உன்னோடு இரண்டறக் கலந்து, இறவாத (மறுபடி பிறவாத) நிலை பூணவேண்டும் என்கிறார். இந்த நிலையைத்தான் ஒவ்வொருவரும் அடையவேண்டும். மேற்கண்ட **பா**வத்தின்படியே, இறப்பதற்கு முன் அருணாசலேஸ்வரனின் அருளைப் பெறவில்லை என்றால், தான் பிறந்த பிறப்பின் பயன் கிட்டாது என்று ரமண பகவான் வருத்தப்படுவதுபோல் இங்கு ஒரு பொருள்படுகிறது. ஆக,

''அருணாசலேஸ்வரா, மரணம் வந்து, நெருப்பானது எனது உடலை நீறாக்கிடுமுன், உனது அருள்மழை பொழிந்திடு!'' என்று பிரார்த்திக்கிறார் ரமண மஹரிஷிகள்.

*(தொடரும்)*


ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் நூல்கள் :**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. நாம மஹிமை | Audio CD |
| 2. ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் | Cassettes, Audio CDs |
| 3. திருவலம் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |
| 4. பாம்பன் ஸ்வாமிகள் | Cassettes, Audio CDs |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட நாமகீர்த்தனம் | Cassette, Audio CD |
| 3. ஸ்ரீ ஸ்வாமிஜி அருளிய 'கலிதர்மஉந்தியார்' | Audio CD |
| 4. மஹாமந்திர கீர்த்தனம் -ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரமான குரலில் | Audio CD |
| 5. கலிகால உசிதம் தர்மம் -2007 புத்தாண்டில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை (தமிழில்) | Audio CD |
| 6. மஹாமந்திர கூட்டுப்பிரார்த்தனை (தமிழில்) | VCD |
| 7. Mahamatra Mass Prayer - 2007 (Clippings of H.H. Sri Sri Swamiji's talk in Tamil with captions in English) | VCD |

**கிடைக்குமிடம் :**

**CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA,**
*Admin. Office :* New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs kindly send e-mail to "publications@madhuramurali.org"

# செய்திகள்

### டிசம்பர் 16-ஆம் தேதி முதல் ஜனவரி 14-ஆம் தேதி வரை

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயிலில் தனுர் மாத பூஜை நடைபெற்றது. தினமும் காலை வேளையில் 50க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் நகர்வல நாமகீர்த்தனம் செய்தனர்.

மதுரபுரி பாகவதபவனத்தில் எழுந்தருளியிருக்கும் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன் ஸந்நிதியிலும் தனுர்மாத பூஜை நடைபெற்றது.

### ஜனவரி 1-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் அருளாசியுடன், உலக அமைதி வேண்டியும், 2007 புத்தாண்டில், எல்லாருக்கும் எல்லாவிதமான நன்மைகளும் ஏற்படவும், ''ஹரே ராம...'' மஹாமந்திரத்தின் வைபவத்தை நிலைநிறுத்தவும், ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில், அகண்ட 'ஹரே ராம..'' நாமகீர்த்தன கூட்டுப் பிரார்த்தனை, சென்னை, தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கத்தில் காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெற்றது. புத்தாண்டை ஒட்டி மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் பெருமாளுக்கு விசேஷ அலங்காரம் நடைபெற்றது. அன்று முழுவதும் அன்னதானம் நடைபெற்றது.

### ஜனவரி 14-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை

குருவாயூரில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில், ஸ்ரீமத்பாகவத உதயாஸ்தமன ஸப்தாஹம், 'மயூரா ரெஸிடென்ஸி' ஏசி ஹாலில் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. இதில் பங்குபெற கர்நாடகம் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பாகவதர்கள் திரளாக வந்திருந்து தினமும் பாராயணம் செய்தனர். மூலபாராயணம் முடிந்தபின், கிருஷ்ண ஜனனத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமிஜி, பிரவசனத்தை, கீர்த்தனங்களுடன் பாடினார்கள்.

காளிங்கநர்த்தனம், ராஸக்கிரீடை இவற்றை, தியாகராஜர், ஊத்துக்காடு, பாரதியார் இவர்களின் கீர்த்தனங்களுடன் பாடி பிரவசனம் செய்து பக்தர்களை மெய் மறக்க வைத்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிஜி, ஸப்தாஹத்தின் 5வது நாள் மாலை, 'நாராயண தீர்த்தத்தில்' ஸ்நாதம் செய்த பின், கோவிலுக்குச் சென்று, அங்கு பிராகாரத்தில் சுமார் 2.30 மணி நேரம், பாகவதர்கள் உடன்பாட, கான மழை பொழிந்தார்கள். கோவிலுக்கு வந்திருந்த எல்லா பக்தர்களும் உடன்பாடி மகிழ்ந்தனர். ஸப்தாஹத்தின் பூர்த்தி நாளன்று, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தீர்த்தக்கலசத்துடன் நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் நாராயண தீர்த்தம் சென்று, அங்கு கலசத்துடன் 'ஸ்ரீ குருவாயூரப்பன்' மேல் சுமார் 45 நிமிடங்கள் பாடல்கள் இயற்றி, பாடினார்கள். பக்தர்கள் தம்மை மறந்து ஆனந்தித்தனர். ஸ்ரீ ஸ்வாமிஜி தன் அருளுரையில், ஸப்தாஹத்தில் பங்குபெற்ற பக்தர்களை ஆசிர்வதித்து, அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இனி நல்லதே நடைபெறும் என வாழ்த்தினார்கள். இந்த ஸப்தாஹத்திற்கான எல்லா கைங்கர்ய வசதிகளை பெங்களூர் திரு.கே.கே.நாராயணன் அவர்கள் ஏற்றுக் நடத்திக் கொடுத்தார்கள். வந்திருந்த பக்தர்களுக்கு தினமும் காலை முதல் இரவு வரை உணவு அளிக்கப்பட்டது.

### ஜனவரி 15-ஆம் தேதி

தைத் திங்கள் முதல் நாள் பொங்கல் திருநாளை ஒட்டி ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு காலையில் விசேஷ திருமஞ்சனம் நடைப்பெற்றது. மாலையில் உத்ஸவர் உள்வீதி புறப்பாடு கண்டருளினார்.

### ஜனவரி 23-ஆம் தேதி

மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸப் பெருமாள் திருக்கோயிலில், ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸப் பெருமாளின் ஐந்தாவது பிரதிஷ்டா தின வைபவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 9 மணிக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருக்கரங்களினால் திருமஞ்சனமும் அலங்காரமும் நடைபெற்றது. மாலையில் நாமகீர்த்தனம் நடைபெற்றது. பிரதிஷ்டாதின வைபவத்தை ஒட்டி ஜனவரி 24-ஆம்

தேதி முதல் ஜனவரி 29-ஆம் தேதி வரை ருக்வேத பாராயணம் நடைபெற்றது.

### ஜனவரி 25-ஆம் தேதி

திருவண்ணாமலையில் அதிதி ஆஸ்ரமத்தில் நடைபெற்ற சாமவேத வித்யாலயாவின் புதிய கட்டிட திறப்பு விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு திறந்து வைத்து அருளுரை ஆற்றினார்கள்.

### ஜனவரி 28-ஆம் தேதி

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், சிறப்பு யோகா வலிமை செய்முறை நிகழ்ச்சிகள் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில், மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் இராஜபாளையத்தைச் சேர்ந்த திரு. ஆர். அழகுமுருகன் மற்றும் குழுவினர், சுவாமி விவேகானந்தா யோகா மற்றும் ஸ்கேட்டிங் கழகம், யோகா செய்முறை செய்து காண்பித்தனர்.

எவர்சில்வர் டம்பளர் மீதும், ஆணிப்பலகை மீதும், முட்டைகள் மீதும் அமர்ந்து யோகாசனம் செய்தது அவர்களின் மனஒருமுகப் பாட்டையும், சிறந்த பயிற்சியையும் காண்பித்தனர்.

யோகா செய்முறை நிகழ்ச்சிகளின் சிகரமாக பீங்கான் கண்ணாடி துண்டுகள் மீது யோகாசனம் செய்தது அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. இத்தனையும் செய்தவர்கள் பள்ளிக்கூட குழந்தைகள் என்பது மிகவும் ஆச்சரியம்.

பிறகு இராஜபாளையம் பதஞ்சலி யோக மையத்தைச் சேர்ந்த திரு. P. நீராத்திலிங்கம் அவர்கள் தம் குழுவினருடன் பல்வேறு யோகாசனத்தை செய்து காண்பித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

தமது சிறப்புரையில் முன்னாள் காவல்துறைத் தலைவர், திரு. பி. காளிமுத்து ஐ.பி.எஸ்., பேசும்போது, தான் காவல் துறையில் பணியாற்றியபோது அனைத்து காவல் துறையினருக்கும் யோகா பயிற்சி அளித்ததும் மட்டுமல்லாமல் ஒரு வருடம் யோகாசன பயிற்சிகளை தாமும் பயின்றதாக சொல்லி யோகாசனம் செய்த சிறார்களை மனமார பாராட்டி. சாந்திபனி குருகுலம் சார்பாக பரிசுகள் அளித்தார்.

# நாமஸங்கீர்த்தன ஸத்சங்கச் செய்திகள்

**பெரியகுளம்...**

**டிசம்பர் 20-ஆம் தேதி-** பெரியகுளம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் அகண்ட ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதரஸ்வாமிஜி நாமகீர்த்தன பேரவை சார்பில் ஹரே ராம R. கிருஷ்ணகுமார் மற்றும் M. காசியம்மாள் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 350க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டனர்.

**டிசம்பர் 30-ஆம் தேதி -** பெரியகுளம் அருகில் மேல்மங்களம் கிராமத்தில், ''ஹரே ராம....'' நகர்வல நாமகீர்த்தனம் நடைபெற்றது. இதில் 400க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் கலந்து கொண்டனர்.

**ஜனவரி 7-ஆம் தேதி-** பெரியகுளம் கோதண்டராமர் கோயிலில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை ''ஹரே ராம..'' நாம கீர்த்தனக் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. இதில் 400க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். பிறகு நகர்வல நாம கீர்த்தனமும் நடைபெற்றது.

**குடியாத்தம்...**

**டிசம்பர் 30-ஆம் தேதி -** குடியாத்தம் பிச்சனூரில் உள்ள ஸ்ரீ வீரஆஞ்சநேயர் திருக்கோயிலில் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை மஹாமந்திர அகண்டநாமஸங்கீர்த்தனம் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ள விமரிசையாக நடைபெற்றது. குடியாத்தம் திரு. மாணிக்கம் முதலியார் மற்றும் பக்தர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

மார்கழி மாதம் முழுவதும் தினமும் விடியற்காலை 4 மணி முதல் 6 மணி வரை குடியாத்தம் வீதிகளில் மஹாமந்திர நகர ஸங்கீர்த்தனம் அப்பகுதியில் உள்ள பல்வேறு மக்கள் கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றது.

**சேரை, அம்பை...**

20.12.2006 புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மஹாமந்திரம் விக்கிரமசிங்கபுரம் அருள்மிகு கிருஷ்ணன் கோவிலில் அகண்டநாமமாக நடைபெற்றது.

27.12.2006 புதன்கிழமை காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை மஹாமந்திரம் சேரன்மகாதேவியில் அருள்மிகு இராமசுவாமி கோவிலில் அகண்ட நாமமாக நடைபெற்றது.

30.12.2006 சனிக்கிழமை காலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை (24 மணி நேரம்) மஹாமந்திரம் அம்பாசமுத்திரம் ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் அகண்ட நாமமாக நடைபெற்றது.

டிசம்பர் 22, 23 தேதிகளில் திரு. ராமானுஜம் அவர்கள் அம்பாசமுத்திரம் கிருஷ்ணன் கோவிலில் நாமமகிமை மற்றும் பாகவததர்மம் பற்றி பேசினார்கள்.

21.1.2007 ஊர்க்காடு கிராமத்தில் காலை 7 மணி முதல் 9 மணி வரை நகர்வல நாமசங்கீர்த்தனம் நடைபெற்றது.

நாமகீர்த்தனத்திற்கான ஏற்பாடுகளை திரு. ரமணன் மற்றும் சேரை அம்பை பக்தர்கள் செவ்வனே செய்தனர்.

### ஜனவரி 13-ஆம் தேதி

சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா, ஸ்ரீநிவாசபுரத்தைச் சேர்ந்த திரு. அறிவரசன், பட்டினப்பாக்கத்தில் மார்கழி மாதம் முழுவதும் காலையில் நகர ஸங்கீர்த்தனம் ஏற்பாடு செய்து நடத்தினார். மார்கழி மாதம் கடைசி நாள் அன்று 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ள, தினமும் நடந்தது போலவே தீப விளக்குடன் நகர ஸங்கீர்த்தனம் விமர்சையாக நடைபெற்றது. நகர ஸங்கீர்த்தனத்தின் முடிவில் நம் ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த வசந்தராஜன் நாம மஹிமையைப் பற்றி எடுத்துரைத்தார்.

### ஜனவரி 20-ஆம் தேதி

திருநாங்கூர் பதினொரு கருடசேவை உற்சவத்தில் சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பில் மஹாமந்திர நகர ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. சுமார் 75 பேர் மாலை 6.00 மணிக்கு வைஷ்ணவ ஆகம ப்ரபந்தப் பாடசாலையிலிருந்து புறப்பட்டுப் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டிருக்கும் வீதிகளில், கோலாட்டத்துடன் நகர ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு நாராயணப் பெருமாள் கோயில் வரை சென்று, பின் பாடசாலைக்குத் திரும்பினர்.

# மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் முன்னிலையில்,

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே*

மஹாமந்திர நாமகீர்த்தன கூட்டுப்பிரார்த்தனை கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரல்படி நடைபெற இருக்கின்றது. இதில் அனைவரும் கலந்துகொண்டு ஸகல நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| தேதி | நேரம் | இடம் | தொடர்புக்கு |
|---|---|---|---|
| 18.02.2007<br>19.02.2007 | 6.30-<br>8.30 pm. | ஆர்த்தி மஹால்<br>கோவில்பட்டி | K. செல்வராஜ்<br>94444 40078 |
| 20.02.2007<br>21.02.2007 | 6.30-<br>8.30 pm. | NRK கிருஷ்ண ராஜா கல்யாண மண்டபம், பழையபாளையம், இராஜபாளையம் | V.S. கணேசராஜா<br>04563-221090 |
| 22.02.2007<br>23.02.2007 | 7.00<br>9.00 pm. | KKVS நடுநிலைப் பள்ளி மைதானம், விருதுநகர் | ஸ்ரீஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி கேந்த்திரா, தூத்துக்குடி<br>0461321185 |
| 24.02.2007<br>25.02.2007 | 6.30<br>8.30 pm. | நெல்லை சங்கீத சபா கைலாசபுரம், திருநெல்வேலி ஜங்ஷன் | A. நடேசன்<br>98433 45458 |

**மங்களானிபவந்து**

*Copyright of articles published in '**MADHURAMURALI**' is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without permission in writting from the publisher of Madhura Murali.*